வருடாந்த செயற்சாதனை அறிக்கை

2022

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

இலக்கம் 09 பிலிப் குணவர்த்தன மாவத்தை

கொழும்பு 07

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்சாதனை அறிக்கை

நிறுவனத்தின் பெயர்:- விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

செலவினத் தலைப்பு :- 219

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் சுருக்க விபரம் / நடைமுறைப்படுத்துதல் சுருக்கம்

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 - வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களைப் (SDG) பூர்த்தி செய்துகொள்ளும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவளம் பற்றிய சுருக்க விபரம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் சுருக்க விபரம் / நடைமுறைப்படுத்துதல் சுருக்கம்

1.1. அறிமுகம்

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

1960 ஆம் தசாப்த காலத்தில் சிறிய அலகு ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களமானது, 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சிற்குக் கீழ் கொண்டுவரப்பட்டு, 1996 ஆம் ஆண்டு ஏ தரமுடைய திணைக்களம் ஒன்றாக தரமுயர்ந்தது.

ஆரோக்கியமான செயற்றிறன்மிக்க சமூகம் ஒன்றின் பொருட்டு விளையாட்டுக் கலாசாரம் மற்றும் ஒழுக்கக் கீழ்படிவின் வாயிலாக விளையாட்டின் விற்பன்னர்களை தோற்றுவித்தவாறு விளையாட்டின் மேம்பாட்டின் பொருட்டு பாரிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களமானது தற்போது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கடமை, நோக்கங்கள்

தொலைநோக்கு

விளையாட்டின் அபிவிருத்தியின் வாயிலாக ஆசியாவில் அபிமானமிக்க தேசமாக ஆகப்பெறல்.

பணிக்கடமை

விளையாட்டின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்திக்கு ஏற்புடைய மூலோபாய நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் வாயிலாக விளையாட்டுக் கலாசாரம் ஒன்றினை உருவாக்குதலும், ஆரோக்கியமான, ஒழுக்கக் கீழ்படிவுள்ள விளையாட்டு விற்பன்னர்களை உருவாக்குதலும் மூலமாக நாட்டின் அபிவிருத்தியினை அண்மித்துக் கொள்ளுவதுடன் இலங்கையினை ஆசியாவில் அபிமானமிக்க தேசமாக ஆக்குதல்.

நோக்கங்கள்

01. சமூகத்தின் சகல பிரிவுகளுக்கும் விளையாட்டிற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுப்பதன் வாயிலாக உடல்நலம், விளைதிறன் மற்றும் திருப்தியினை விருத்தி செய்தல்.


02. விளையாட்டுத்துறையின் வாயிலாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வெற்றிகளைக் கையகப்படுத்திக் கொள்ளல்.

03. விளையாட்டு வீர வீராங்கனைகளை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடிய சர்வதேச மட்ட அறிவு கொண்ட தேசிய பயிற்றுவிப்பாளர்களைத் தோற்றுவித்தல்.

04. விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு சர்வதேச மட்டத் தரநிலைகொண்ட விளையாட்டு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

05. விளையாட்டுச் சங்கங்களை ஒழுங்குபடுத்துவதன் பொருட்டு அவசியமாக அமையக் கூடிய கொள்கைகள் மற்றும் தரநிலைகளை ஏற்படுத்துதல்.

1.3. ஒழுங்கமைப்பு வியூகம்



1.4. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- ❖ பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்
- ❖ நிர்வாகப் பிரிவு
- ❖ கணக்குப் பிரிவு
- ❖ திட்டமிடல் பிரிவு
- ❖ அபிவிருத்திப் பிரிவு
- ❖ விளையாட்டுப் பிரிவு
- ❖ உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- ❖ கொள்வனவுப் பிரிவு

1.5. திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனப்படுத்தப்பட்ட நிதியங்கள்

அரசாங்கத்தின் திரட்டு நிதியம்

1.6. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள் (இருப்பின்)

ஏற்புடையதாகாது.

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

விசேட, வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1 பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

தொடர் இலக்கம்	செலவுத் தலைப்பு	விபரம்	2022 நிதியேற்பாடு (ரூபா.மில்)				2022.12.31 ஆம் திகதிக்கு நிதிச் செலவினம் (ரூபா. மில்)			நிதி முன்னேற்றம் (%)	பௌதீக முன்னேற்றம் (%)
			ஆரம்ப ஏற்பாடு	திருத்தப்பட்ட ஏற்பாடு	மேலதிக ஏற்பாடு	மேலதிக ஏற்பாடு மற்றும் மாற்றல்களின் அடிப்படையில் தேறிய ஏற்பாடு	வி. அபி. திணை	மா.செ	மொத்தம்		
1	2506	உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	20.000	5.000	10.000	15.000	7.803	3.944	11.747	78%	90.5%
2	17 – 2104 - 66	மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டுப் பல்கட்டிடத் தொகுதிகளின் நிர்மாணிப்பு	25.000	25.000	130.000	163.705	159.489	0.000	159.489	97%	93%
	46	பர்ணாட் அலுவிஹாரே விளையாட்டரங்கு - மாத்தளை 400 மீற்றர் ஓட்டப் பாதை	10.000	10.000	0.000	1.295	0.000	0.000	0.000	0%	40%
3	29 - 2104	கல்முனை சந்தாங்கேணி உள்ளக விளையாட்டு அரங்கினைப் புதுப்பித்தல்	10.000	5.000	0.000	5.000	0.000	0.000	0.000	0%	22%

தொடர் இலக்கம்	செலவுத் தலைப்பு	விபரம்	2022 நிதியேற்பாடு (ரூபா. மில்)				2022.12.31 ஆம் திகதிக்கு நிதிச் செலவினம் (ரூபா.மில்)			நிதி முன்னேற்றம் (%)	பௌதீக முன்னேற்றம் (%)
			ஆரம்ப ஏற்பாடு	திருத்தப்பட்ட ஏற்பாடு	மேலதிக ஏற்பாடு	மேலதிக ஏற்பாடு மற்றும் மாற்றல்களின் அடிப்படையில் தேறிய ஏற்பாடு	வி. அபி. திணை	மா.செ	மொத்தம்		
4	2 – 1409	திறன் விருத்தி									
	85.	விளையாட்டுச் சங்கங்களின் பொருட்டான பங்களிப்பு	100.000	20.000	67.716	100.557	88.130	1.500	89.630	89%	98%
	86.	கிரீடா சக்தி	100.000	20.000	37.802	57.802	47.836	-	47.836	83%	73%
	87.	தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டித் தொடர்கள்	100.000	20.000	12.074	32.074	31.138	-	31.138	97%	75%
	89.	தேசிய விளையாட்டுப் பெருவிழா	50.000	20.000	21.518	45.518	45.304	0.008	45.312	100 %	77%
	95.	கிராமத்திலிருந்து நாட்டிற்கு ஒரு விளையாட்டு வீரன்	10.000	5.000	0.000	5.000	0.271	0.871	1.142	22%	60%
	96.	விளையாட்டுப் பொருளாதாரத்தினை விருத்தி செய்தல்	50.000	25.000	0.000	25.000	3.401	1.720	5.121	20%	35%
	100.	ஆரோக்கியம் கொண்ட சமூகம் ஒன்றின் பொருட்டு தகைமைகள்	10.000	2.000	0.000	2.000	1.277	0.100	1.377	69%	15%
	101.	ஒலிம்பிக்கிற்கான வழி	100.000	50.000	0.000	32.996	3.781	12.112	15.893	48%	26%

2.1.1. விசேட வெற்றிகள்

இல. (1)	விளையாட்டுப் போட்டித் தொடரின் பெயர் (2)	இடம்பெற்ற நாடு (3)	விளையாட்டு (4)	நிறை வகுப்பு (5)	நிகழ்ச்சி (6)	விளையாட்டு வீரனின் பெயர் (7)	ஆற்றுகை (தங்கம், வெள்ளி, வெண்கலம், வீரமுதன்மை, துணை வீரமுதன்மை) (8)
01.	சுப்பர் 100 திறந்த பூப்பந்தாட்ட போட்டித் தொடர்	இந்தியா, லக்னவ்	பூப்பந்தாட்டம்	-	கலப்பு இரட்டையர்	சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹென்தஹேவா	வீரமுதன்மை
02.	சிங்கப்பூர் பாரந்தூக்கல் போட்டித் தொடர்	சிங்கப்பூர்	பாரந்தூக்கல்	73 கி. கிறாம்	-	இந்திக்க திஸாநாயக்க	தங்கப் பதக்கம்
				67 கி. கிறாம்	-	சத்துரங்க லக்மால்	தங்கப் பதக்கம்
				49 கி. கிறாம்	-	ஸ்ரீமாலி சமரக்கோன்	தங்கப் பதக்கம்
				55 கி. கிறாம்	-	திலங்க இசுறு குமார	வெண்கலப் பதக்கம்

இல. (1)	விளையாட்டுப் போட்டித் தொடரின் பெயர் (2)	இடம்பெற்ற நாடு (3)	விளையாட்டு (4)	நிறை வகுப்பு (5)	நிகழ்ச்சி (6)	விளையாட்டு வீரனின் பெயர் (7)	ஆற்றுகை (தங்கம், வெள்ளி, வெண்கலம், வீரமுதன்மை, துணை வீரமுதன்மை) (8)
03.	பொதுநலவாய நாடுகளுக்கிடையேயான விளையாட்டு விழா	இங்கிலாந்து, பர்மிங்ஹாம்	பரிதிவட்டம் எறிதல்	-	F42-44/61-64	H.G. பாலித்த பண்டார	வெள்ளிப் பதக்கம்
			பாரந்துாக்கல்	225 கி. கிறாம்	ஸ்நெட்ச் முறை மற்றும் கிளீன் அன்ட் ஜர்க் முறை	Y.D.I. குமார	வெண்கலப் பதக்கம்
			மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்	-	100 மீற்றர்	யுபுன் அபேகோன்	வெண்கலப் பதக்கம்
			மல்யுத்தம் (பெண்கள்)	57 கி. கிறாம்	-	நெத்மி அஹிங்ஸா	வெண்கலப் பதக்கம்
04.	ஆசிய கிண்ண கிரிக்கட் போட்டித் தொடர்	டுபாய் மற்றும் சார்ஜா	கிரிக்கட்	-	-	இலங்கை கிரிக்கட் தேசிய கிரிக்கட் அணி	வீரமுதன்மை
05.	2022 ஆசிய வலைப்பந்தாட்ட வீரமுன்மைப் போட்டிகள்	சிங்கப்பூர்	வலைப்பந்தாட்டம்	-	-	இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணி	வீரமுதன்மை
06.	2022 தெற்காசிய கனிட்ட பூப்பந்தாட்ட வீரமுன்மைப் போட்டிகள்	இந்தியாவின் குவாஹாட்டி	பூப்பந்தாட்டம்	-	-	15 வயதின் கீழ் குழு	வெள்ளிப் பதக்கம்
					-	17 வயதின் கீழ் குழு	வெள்ளிப் பதக்கம்
					ஆண்கள் (இரட்டையர்)	17 வயதின் கீழ் குழு	வெள்ளிப் பதக்கம்
					பெண்கள் (இரட்டையர்)	15 வயதின் கீழ் குழு	வெள்ளிப் பதக்கம்
					தனி	தனிப் போட்டி	வெண்கலப் பதக்கங்கள் 08

2.1.2 எதிர்கால இலக்கு

01. 2024, 2028 மற்றும் 2032 ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டித் தொடர்களில் பதக்கங்களை இலக்காகக் கொண்டு மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் இயற்திறன் கொண்ட விளையாட்டு வீர வீராங்கனைகளை இனங்கண்டு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குவதன் பொருட்டு குழாம்களுக்குள் சேர்த்தல்.

(அ). கிராமத்திலிருந்து நாட்டிற்கு ஒரு வீரன் நிகழ்ச்சித்திட்டம் - முதன்மை குழாம்

(ஆ). கிரீடா சக்தி நிகழ்ச்சித்திட்டம் - அபிவிருத்திக் குழாம், இளையோர் மற்றும் கனிட்ட குழாம்

(இ). ஒலிம்பிக்கிற்கான வழி (Road to Olympic) நிகழ்ச்சித்திட்டம் - உயர் ஆற்றுகைக் குழாம், தேசிய குழாம்.

02. நாட்டின் தேசிய பொருளதாரத்திற்கு வலுவூட்டுவதன் பொருட்டு விளையாட்டுப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரும் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையினை இலக்காகக் கொண்டு விளையாட்டினை அண்மித்த தொழில்கள் தொடர்பாக இளைஞர் பிரிவினரை ஈடுபடுத்துதல்.


03. ஆரோக்கியமான நோய் நொடிகளற்ற மக்கட் சமுதாயம் ஒன்றினை ஏற்படுத்துதலினை நோக்கமாகக் கொண்டு உடல்நல கழகங்களைத் தாபித்தல் மற்றும் திறந்தவெளி உடல்நல மத்திய நிலையங்களை ஏற்படுத்துதல்.

04. தற்போது நிர்மாணிக்கப்பட்டவாறு காணப்படும் கிளிநொச்சி, சபரகமுவ ஆகிய மாகாண விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதிகள், வவுனியா, மாத்தளை, கம்பஹா ஆகிய மாவட்ட விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதிகளை அங்க சம்பூரணமான விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதிகளாக நிறைவுறுத்தல்.

பணிப்பாளர் நாயகம்

அத்தியாயம் 03

3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று



ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		795,850,000	1,544,232,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		42,012,629	81,891,580	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		12,981,267	12,930,554	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		850,843,895	1,639,054,134	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		850,843,895	1,639,054,134	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	105,175,795	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		850,843,895	1,533,878,339	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
205,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	193,121,829	182,417,050	
561,119,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	426,195,254	436,548,782	ஏசீஏ-2(ii)
1,950,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,154,399	1,322,413	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
768,569,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		620,471,482	620,288,245	
	மூலதனம் செலவினம்				
8,217,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	7,046,224	34,633,480	
176,064,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	160,825,896	676,949,937	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,750,000	நிறன் விருத்தி	14	1,183,130	1,317,847	
15,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	11,990,070	187,203,948	
201,531,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		181,045,320	900,105,212	
	வைப்புக் கொடுப்பனவுகள்		96,747,221	30,774,057	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		11,109,118	14,190,702	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		107,856,339	44,964,759	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		909,373,140	1,565,358,216	
-	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(58,529,245)	(31,479,877)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(58,529,245)	(31,479,877)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-		ஏசீஏ-3
			(0)	(0)	

3.2. நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று


	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	3,877,451,950.00	3,716,665,055
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	108,384,791.29	110,256,940
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**3,985,836,741.29**	**3,826,921,995.00**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(104,602,824.91)	(157,465,268)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		3,877,451,950.00	3,716,665,054
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	69,349,972.19	69,349,972
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	143,637,644.01	198,372,237
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**3,985,836,741.29**	**3,826,921,995.00**

பக்க இலக்கம் 01 முதல் 46 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 47 முதல் 61 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 24/02/2023	திகதி : 24.02.2023	திகதி : 24/02/2023
K. Mahesan Secretary Ministry of Sports and Youth Affairs No.09, Philip Gunawardhana Mawatha, Colombo 07	Amal Edirisooriya Director General Department of Sports Development No : 09, Philip Gunawardane Mawatha, Colombo - 07.	S.D.N. Angelo Palitha Chief Accountant Department of Sports Development Colombo 07 T. F.: 011 2697001, 071427600

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று



ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	32,764,256	28,905,085
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	795,850,000	1,544,232,000
முற்பணங்களை அறவிடல்	10,948,123	12,675,218
வைப்புக்களின் பெறுகை	42,012,629	81,891,581
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**881,575,007**	**1,667,703,884**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	600,729,738	607,385,055
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	-	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	505,633	19,585,198
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	105,175,795
முற்பணக் கொடுப்பனவு	11,109,118	14,254,002
வைப்புக் கொடுப்பனவு	96,747,221	30,774,058
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**709,091,709**	**777,174,108**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**172,483,298**	**890,529,776**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	4,578,567	1,662,538
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**4,578,567**	**1,662,538**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	177,061,864	892,192,314
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**177,061,864**	**892,192,314**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(172,483,298)**	**(890,529,776)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதிக்கூற்றுக் குறிப்புகள்

3.5 வருமானங்களைச் சேகரிக்கும் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு (ரூ)		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ)	இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக
2003.09.00	விற்பனை மற்றும் கட்டணங்கள் ஏனைய பெறுகைகள்	18,000,000.000	-	24,892,450.74	138%
2002.02.99	வட்டி மற்றும் ஏனையவை	1,400,000.000	-	4,578,566.51	327%
2004.01.00	W & OP (அரசாங்க வருமானங்கள்)	6,000,000.000	-	7,842,075.67	131%
2002.01.00	வாடகைக் கெடுப்பனவு	140,000.00	-	93,439.98	67%

3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ரூ.000

நிதியேற்பாட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	577,100,000.00	778,569,000.00	620,471,481,86	80%
மூலதனம்	54,000,000.00	202,531,000.00	181,045,319.85	89%

3.7. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்களின் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்டச் செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட நிதியேற்பாடு.

ரூ.000

தொடர் இலக்கம்	நிதியேற்பாட்டினைப் பெற்றுக்கொண்ட அமைச்சு / திணைக்களம்	நிதியேற்பாட்டின் நோக்கம்	நிதியேற்பாடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர் சம்பளக் கொடுப்பனவு	346,390.00	-	346,390.00	98%
02	பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர் சம்பளக் கொடுப்பனவு	171,300.00	-	165,337.98	97%

3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 ஆம் திகதிக்கு பொருள் அளவாய்வுச் சபை அறிக்கையின் படி மீதி (ரூ)	2022.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி (ரூ)	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	முன்னேற்றத்தினை % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	–	264,547,973.63	–	–
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	–	238,219,711.56	–	–
9153	காணி	–	-	–	–
9160	ஆற்றப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைகள்	–	3,374,684,264.81	–	–

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**50% - 74%**
ஏற்புடைய வருடத்தினுள் நிறைவுறுத்தப்பட்ட விளையாட்டு உட்கட்டமைப்பு வசதி அளவு	–	–	√
சர்வதேசப் பதக்கங்களின் எண்ணிக்கை	–	–	√

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களைப் (SDG) பூர்த்தி செய்துகொள்ளும் செயலாற்றுகை

5.1. இனங்காணப்பட்ட ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களைக் காட்டுக.

குறிக்கோள் / நோக்கம்	குறிக்கோள்	வெற்றிச் சுட்டிகள்	இதுவரை வெற்றியினைப் பெற்றுக்கொள்ளலின் வளர்ச்சி		
			0% - 49%	50 % - 74%	75% - 100%
வறுமை, பசி மற்றும் நோய்நொடிகளின்றி, தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்ட மற்றும் சகல உயிர்களையும் வளம்பெறச் செய்தல்.	உடல்நல கழகங்களை ஏற்படுத்துதல்	பொதுமக்களின் உடல்நலத்தின் பொருட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	√	–	–
மனிதர்களின் ஒட்டுமொத்த திறனை அடைந்து கொள்ளுவதற்கும் மற்றும் பொது வளங்களைப் பெற்றுக்கொள்ளுவதன் பொருட்டும் பங்களிப்புச் செய்வதற்காக சமமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுத்தல்.	2028 ஆம் வருடமாகும் போது 5 பிரதான விளையாட்டுக்களில் ஒலிம்பிக் நுழைவு அடைவுமட்டத்தினை நோக்கி அண்மித்தல் மற்றும் வெற்றியொன்றினை ஈட்டிக் கொள்ளல்.	இனங்காணப்பட்ட விளையாட்டுப் போட்டித் தொடர்களில் மற்றும் வீரமுதன்மைகளில் வெற்றியீட்டிய சர்வதேச பதக்கங்களின் எண்ணிக்கை.	–	√	–
பிள்ளைகள் தொடர்பாக முதலீடு செய்யும் ஒவ்வொரு பிள்ளைக்கும் வன் முறையின்றி வளர்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல்	தேசிய மட்டத்தில் விளையாட்டு விழாக்களை நடாத்துதல்	தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் போது நிலைநாட்டப்பட்ட தேசியமட்ட சாதனைகளின் எண்ணிக்கை	–	–	–
	தற்போது விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தும் எண்ணிக்கையினை வருடாந்தம் 20% இனால் அதிகரித்தல்	விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்பாட்டிற் கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை	√	–	–
	சகல விளையாட்டுச் சங்கங்களும் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பித்து பதவிதாங்குநர் தேர்தல்களை நடாத்தி சட்டத்திற்கு இயைபாக்கம் அடையச் செய்தல்	விளையாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயைபாக்கம் அடையும் விளையாட்டுச் சங்கங்களின் சதவீதம்	–	–	√

குறிக்கோள் / நோக்கம்	குறிக்கோள்	வெற்றிச் சுட்டிகள்	இதுவரை வெற்றியினைப் பெற்றுக்கொள்ளலின் வளர்ச்சி		
			0% - 49%	50 % - 74%	75% - 100%
	சர்வதேச பதக்கங்களை வெல்லக் கூடிய விளையாட்டு வீரர்களின் சதவீதத்தினை 40% இனால் அதிகரித்தல்	திணைக்களப் பயிற்றுவிப்பாளர்களால் இனங்காணப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளை பயிற்றுவித்து சர்வதேசப் பதக்கங்களை வெற்றிகொள்ளுவதற்கு முன்னிலைப்படுத்தக் கூடிய வீரர்களின் சதவீதம்	√	_	_

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் வெற்றிகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

வெற்றிகள்

- 22 ஆவது தடவையாகவும் இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையேயான விளையாட்டு விழாவில் இலங்கைத் திருநாட்டிற்கு 03 வெண்கலப் பதக்கங்களுடன் ஒரு வெள்ளிப் பதக்கமுமாக 04 பதக்கங்களை வெற்றி கொள்ளுவதற்கு இயன்றது.

சவால்கள்

- 2022 ஆம் வருடம் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுவதற்கு ஏதுவாதல்.
- காலாண்டு பாதீட்டு நிதியேற்பாடு கிடைக்கப்பெறலின் அடிப்படையில் தேவையான சந்தர்ப்பங்களில் பணிமுற்பணம் கிடைக்கப்பெறாமை.
- நாட்டில் எழுந்துள்ள பொருளாதார பிரச்சினையினைக் காரணமாகக் கொண்டு நிர்மாணித்தலுடன் தொடர்புபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு ஏதுவாதல். (விலை ஏற்ற இறக்கம் மற்றும் மூலப் பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக)

அத்தியாயம் 06 - மனிதவளம் பற்றிய சுருக்க விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம் / மிகை
சிரேட்ட நிலை	15	11	04
மூன்றாம் நிலை	23	11	12
இரண்டாம் நிலை	256	195	61
ஆரம்ப நிலை	101	82	19
மொத்தம்	**395**	**299**	**96**

6.2. பற்றாக்குறையான அல்லது மிகையான மனிதவளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுக.

தற்போது வெற்றிடம் நிலவும் பதவிகளுக்கு ஏற்புடைய கடமைகள் சேவையிலுள்ள சேவையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதன் வாயிலாக ஏற்புடைய கடமைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன், இவ் வெற்றிடம் நிலவும் பதவிகளைப் பூரணப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவ்வாறே நிறுவனத்தின் செயலாற்றுகையினை மேம்படுத்துவதன் பொருட்டு இவ் வெற்றிடப் பதவிகள் பூரணப்படுத்திக் கொள்ளப்படுதல் அத்தியாவசியமானதாகும்.

6.3. மனிதவள அபிவிருத்தி

விளையாட்டுத்துறைசார் உத்தியோகத்தர்களின் பயிற்சிப்பாடநெறிகள் - 2022							
தொ. இல	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு
				உள்நாட்டு	வெளிநாட்டு		
1	ஒலிம்பிக் கூட்டொருமைப்பாடு விளையாட்டு நிர்வாகம் (OSSAC) - 2022	02	04 நாட்கள்	ரூ. 40,000.00	-	உள்நாட்டு	
2	விளையாட்டு உடற்றகவு நிலையில் விஞ்ஞான பட்டம்	02	02 வருடங்கள்	ரூ. 375,000.00	-	உள்நாட்டு	
3	வெளிக்கள பயிற்சிப் பட்டறை	40	02 நாட்கள்	ரூ. 360,000.00	-	உள்நாட்டு	

விளையாட்டுத்துறைசாரா உத்தியோகத்தர்களின் பயிற்சிப்பாடநெறிகள் - 2022							
தொ. இல	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு
				உள்நாட்டு	வெளிநாட்டு		
1	கொள்வனவு முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நிர்வாக டிப்ளோமா	1	01 வருடம்	ரூ.100,000.00	-	உள்நாட்டு	ஏற்புடைய விடயம் தொடர்பாக அறிவு பெறப்பட்டுள்ளது

❖ நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

இங்கு உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தியடைகின்றமையால் பணியாளர்களின் இயலுமைகள் நேரடியாகவே மேம்பாடு அடைகின்றது. இயலுமை அதிகரிக்கும் போது பணியாளரின் சுயமரியாதை, தன்னம்பிக்கை மற்றும் பணியாளர்களின் திருப்தி அதிகரிப்பதுடன், அதன் வாயிலாக பணியாளர் ஊக்குவிக்கப்படுதல் அதிகரிக்கும். அவ்வாறே, இத்தகைய பண்புகளின் காரணமாக திணைக்களத்தின் வினைத்திறன் அதிகரிக்கும். இதன் பிரகாரம், திணைக்கள உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைப்பாடுகளின் பிரகாரம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக நிறுவனத்தின் செயலாற்றுகை மேம்பாடடையும்.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல்	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
1	**கீழ்தரப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் / கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதிக்கூற்றுக்கள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேட்டை / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து பொதுத் திறைசேரிக்கு உரிய தினத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட்பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
2.10	பொறுப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் அறிவுறுத்தியிருத்தல்	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரங்களை ஒப்படைத்திருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய பொதுக்கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி அரச ஊதிய மென்பொருள் தொகுப்பினைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
4	**வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டுள்ளது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டுள்ளது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NDB) உரிய தினத்தில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உரிய தினத்தில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் நாள்குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு, சகல கணக்காய்வு வினாக்களுக்கும் பதிலளித்திருத்தல்	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134(2) DMA/1-2019 இன் பிரகாரம், வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர், உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினைத் தயாரித்தல்.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளித்திருத்தல்	இணக்கமானது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம், அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் நகல்களை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	சமர்ப்பிக்கப்பட்டுள்ளது		
6.4	நிதிப்பிரமாணம் 134 (3) இன் பிரகாரம், அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் நகல்களை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	சமர்ப்பிக்கப்பட்டுள்ளது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் பிரகாரம், ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நான்கினையாவது ஏற்புடைய வருடத்தில் நடாத்தியிருத்தல்	நான்கு குழுக்களும் நடாத்தப்பட்டுள்ளன		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	இலக்கம் 01/2017 ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்களை கொம்போட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
8.2	மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், அச் சுற்றறிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்துதலினை ஒருங்கிணைப்புச் செய்தல் தொடர்பாக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அவ் உத்தியோகத்தர் பற்றிய தகவல்களை கொம்போட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	இணக்கமானது		
8.3	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் பிரகாரம், பொருள் அளவாய்வினை மேற்கொண்டு ஏற்புடைய அறிக்கைகளை உரிய தினத்திற்கு கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருள் அளவாய்வில் அறியப்பட்ட மிகை, குறைபாடு மற்றும் வேறு பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் நிறைவுறுத்தியிருத்தல்.	இணக்கமானது		
8.5	கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதலை நி.பி. 772 இன் பிரகாரம் மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்கள் தொடர்பாக தினசரி இயக்கக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்பட்டிருத்தல்	இணக்கமானது		
9.3	வாகன பதிவுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுதல்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் படி, வாகனங்களில் எரிபொருட்கள் தகனமடைதலை மீளப் பரிசோதித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகைக் கால எல்லையின் பின்னர், குத்தகை வாகனங்களின் பதிவுப் புத்தகங்களின் பூரண உரித்து மாற்றப்பட்டிருத்தல்	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய தினத்திற்கு வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அவற்றைச் சான்றுபடுத்தி அவற்றைக் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட செயற்பாடற்ற கணக்குகளைத் தீர்த்திருத்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந் நிலுவைகளை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்திருத்தல்	இணக்கமானது		
11	**நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துதல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை அவற்றின் வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன் பிரகாரம், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் வருட முடிவில் எஞ்சிய ஏற்பாடு வரையறைகளை மீறாதபடி பொறுப்புக்கள் தொடரப்படல்	இணக்கமானது		
12	**அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாகக் காணப்படும் நிலுவையிலுள்ள கடன் நிலுவையினை தீர்த்திருத்தல்	இணக்கமானது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்கள் தொடர்பாகவான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்து பராமரித்தல்	இணக்கமானது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு வருடத்தின் முடிவில் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பியிருத்தல்	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்ட தற்செயல் இடைக்கால முற்பணத்தை, அப் பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்திருத்தல்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தற்செயல் இடைக்கால முற்பணம் விடுவிக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.4	பணிமுற்பணக் கணக்கின் மீதியானது, மாதாந்தம் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்படுதல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல்	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய பிரமாணங்களின் பிரகாரம், சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதலை நிகழ்த்தியிருத்தல் வேண்டும்	இணக்கமானது		
15.2	சேகரிக்கப்பட்டிருந்த வருமானம், வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
15.3	நி.பி. 176 இன் பிரகாரம் எஞ்சிய வருமான அறிக்கையினை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் எல்லையினுள் பணியாளர்சபையினைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	பணியாளர்சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியலை எழுத்துமூலமாக வழங்கியிருத்தல்	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் பதிவேடு ஒன்றினைப் புதுப்பித்துப் பராமரித்தல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன், வலைத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழியின் ஊடாக நிறுவனம் பற்றிய பொதுமக்களின் பாராட்டுதல்கள் / குற்றச்சாட்டுக்கள் என்பனவற்றை பிரசுரிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரண்டு தடவைகள் அல்லது ஒரு தடவை அறிக்கையினை சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் சுற்றறிக்கை இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) இன் பிரகாரம் பிரசைகள் /சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்	இணக்கமற்றது	தற்போதளவில் வரைவானது அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விளக்கமளித்தல்	இணக்கமற்றதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முன்மொழியும் சரியான செயல்வழிகள்
18.2	அச் சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம், பிரசைகள் / சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி அமுல்படுத்தும் நடவடிக்கையினை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பாக நிறுவனத்தினால் முறைமை ஒன்றினை தயாரித்திருத்தல்.	இணக்கமற்றது	எதிர்காலத்தில் முறைமை ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும.	
19	**மனிதவள திட்டத்தினை உருவாக்கல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்டமொன்றினைத் தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19.2	பணிச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரின் பொருட்டும் வருடமொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களை விடக் குறையாத பயிற்சிச் சந்தர்ப்பமொன்றினை மேற்குறிப்பிடப்பட்ட மனிதவளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
19.3	மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணிச்சபையினரின் பொருட்டும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டிருத்தல்	இணக்கமற்றது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல், கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருத்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கு துலங்கலைக் காட்டுதல்**			
20.1	முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளின் வாயிலாக காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்திருத்தல்.	இணக்கமானது		